செ.வெ. எண்: 774 நாள்: 21.12.2011

## பத்திரிக்கைச் செய்தி

### தமிழகத்தில் ரூ.100.10 இலட்சம் செலவில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு குளிர்பதன கிடங்கு வசதி அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழகத்தில் சராசரியாக 100 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்திச் செய்யப்படுகிறது. விவசாயிகள் விளைவிக்கும் காய்கறி மற்றும் பழங்கள் கெடாமல் பாதுகாக்கவும், விலை வீழ்ச்சி காலங்களில் நல்ல விலை கிடைக்கவும், ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி தரவும், தமிழகத்தில் ஒட்டன்சத்திரம் (திண்டுக்கல் மாவட்டம்), திண்டிவனம் (விழுப்புரம் மாவட்டம்) மற்றும் கோயம்புத்தூர் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் ரூ.100.10 இலட்சம் செலவில் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி நிறுவனத்தின் (APEDA) 75% நிதியுதவியுடன் 15 முதல் 25 டன் கொள்ளளவுள்ள குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்படவுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் திரு செ. தாமொதரன், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திரு சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் திரு தங்க கலியபெருமாள் மற்றும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி நிறுவன தென்மண்டல உதவி பொது மேலாளர் திரு. ரவீந்தரா ஆகியோரால் தலைமைச் செயலகத்தில் இன்று (20.12.2011) கையெழுத்திடப்பட்டது. இதற்கான ஆயத்த பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. இதனால் திண்டுக்கல், விழுப்புரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகளும் சுற்றுவட்டார மாவட்ட விவசாயிகளும் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.